T.C: 027

074/DD/21

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## SPECIAL LANGUAGE TEST FOR OFFICERS OF THE EDUCATION DEPARTMENT HIGHER STANDARD – FIRST PAPER – TAMIL (TEXT AND TEXTUAL GRAMMAR)

(Without Books)

Maximum Time : 2.30 hours

Maximum Marks : 100

### பகுதி – I

**எவையேனும் ஆறு வினாவிற்கு விடை தருக.** **(6 × 4 = 24)**

1. வசன கவிதை – குறிப்பு வரைக.

2. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

3. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

4. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் மா.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

5. நான்கனுக்கு இலக்கணக் குறிப்பு தருக :

(அ) தடக்கை

(ஆ) மீளாத்துயர்

(இ) அசைஇ

(ஈ) செந்தீ

6. நான்கினுக்கு வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

(அ) தாமரை இலை நீர்போல

(ஆ) மழைமுகம் காணாப் பயிர் போல

(இ) மனக்கோட்டை

(ஈ) கண்ணும் கருத்தும்

[Turn over

7. நான்கினுக்கு பொருள் தருக :

(அ) யாக்கை

(ஆ) துணர்

(இ) உமணர்

(ஈ) பொம்மல்

8. நான்கினைப் பிரித்து எழுதுக.

(அ) உலகமில்லை

(ஆ) கொண்டிரு

(இ) தேம்பாவணி

(ஈ) நன்கலம்

## பகுதி – II

**எவையேனும் ஆறு வினாவிற்கு விடை தருக.** **(6 × 6 = 36)**

1. தென்னன் மகளே ! ... எனத் தொடங்கும் பாடலை அடிமாறாமல் எழுதுக.
2. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.
3. வேலோடு நின்றான் இடுஎன்றது போலும்
   கோலோடு நின்றான் இரவு – குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.
4. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.
5. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
6. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?
7. ‘முதல்மழை விழுந்ததும்’ என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

## பகுதி – III

**எவையேனும் நான்கு வினாவிற்கு விடை தருக.** **(4 × 10 = 40)**

1. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.
2. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.
3. ‘புதிய நம்பிக்கை’ – கதை கருப்பொருளும் மாறாமல் எழுதுக.
4. அழகரி சாமியின் ‘ஒருவன் இருக்கிறான்’ சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.
5. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.